**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 51/2018</u>**

Pw3 – திரு.ஆரோக்கியசாமி நாள். 16.04.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி அழைத்ததன் பேரில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இடப்பிரச்சினைக்காக தாக்கல் செய்துள்ளார். வாதியும் நானும் உறவினர்கள் என்றால் சரியல்ல. நான் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்து என எந்த சொத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றால் பழைய சர்வே எண்.162/8, புதிய சர்வே எண்.162/27 சொத்தை குறிப்பிட்டுள்ளேன். தாவா சொத்திற்கு பக்கத்தில் எனது பூர்வீக சொத்து உள்ளது என்றும் அதை அனுபவம் செய்து வருகிறேன் என சொல்லியுள்ளேன் என்றும், அதற்கான ஆவணங்களை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. என்னுடைய சொத்திற்கு கிழக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் வாதியின் சொத்து உள்ளது. என்னுடைய சொத்திற்கு மேற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் ஆரோக்கியம் சொத்து உள்ளது. என்னுடைய சொத்திற்கு வடக்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால்

வாதியின் சொத்து உள்ளது. என்னுடைய சொத்திற்கு தெற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் சேவியர் சொத்து உள்ளது. எனது ஊரில் எனக்கு எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் பத்து இலக்க சொத்துக்கள் உள்ளது. மேற்படி எனது பூர்வீக சொத்துக்கு சர்வே எண் என்னவென்றால் தெரியாது. என்னுடைய பூர்வீக சொத்துக்கள் என சொல்லப்படும் அனைத்தும் வருவாய் ஆவணங்களில் அரசுக்கு பாத்தியப்பட்டது என உள்ளது என்றால் சரியல்ல எங்களின் பெயரில் தான் உள்ளது. மேற்படி பூர்வீக சொத்துக்கள் எனது பெயரில் இருந்து வருகிறது என்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

3. என்னுடைய சொத்திற்கு பக்கத்தில் தாவா சொத்து இல்லை என்றும், வாதி பஞ்சாயத்து தலைவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன். தாவா சொத்தின் சர்வே எண்ணை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வாதிக்கு ஆதராவாக அவருக்கு பாத்தியப்பட்டது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நாளது தேதி வரை தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சொத்தின் சர்வே எண் தெரியாமல் தாவா சொத்தின் சர்வே எண்ணை மட்டும் சரியாக சொல்வதன் மூலம் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிப்பது தெரிய வருகிறது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் யாருடைய சொத்து உள்ளது என்றால் லூர்து மேரி மற்றும் வாதியின் சகோதரர் அந்தோனி ஆகியோர்கள் சொத்து உள்ளது. மேற்படி தெற்கு பக்கம் சொத்தானது எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனது பங்காளி சவரிமுத்துவிடமிருந்து மேற்படி

அந்தோனி கிரையம் வாங்கிய சொத்து. மேற்படி தெற்கு பக்க சொத்தானது நான் சொல்வது போல் கிரையம் வாங்கிய சொத்து இல்லை என்றும் அரசாங்கத்தால் ஒப்படைப்பு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி அந்தோனி எத்தனை வருடங்களாக பாதிரியராக இருந்து வருகிறார் என்றால் பாதிரியராக இருப்பது தெரியும் எவ்வளவு காலமாக எங்கு பணிபுரிகிறார் என்று எனக்கு தெரியாது. பொதுவாக யார் அனுபவம் செய்து வருகிறார்களோ அவர்களுக்கு தான் ஒப்படைப்பு பட்டா வழங்கப்படும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் தான் 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்திற்கு ஒப்படைப்பு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை